செய்தி வெளியீடு எண்:398 நாள்:07.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (7.7.2021) அரசு திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை பராமரிப்பு மையத்தை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திருக்குவளையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று, அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை பார்வையிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் பதிவேட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான உடன்பிறப்புக்களோடு ஓயாது பணியாற்றி, உழைப்பால் முதல்வராக பொறுப்பேற்றுள்ள நான் எடுத்துக் கொள்ளும் உறுதி – தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார், பதவி என்பது பொறுப்பு, பொறுப்போடு மக்களுக்கு பணியாற்ற வேண்டும் என்று. அதை மனதில் ஏற்று முதல்வர் பதவியை, பதவியாக கருதாமல், பொறுப்பு என்று கருதி என் பயணம் தொடரும். அதைத்தான் அவர் பிறந்த வீட்டில் உறுதி எடுத்துக் கொள்கிறேன்” என்று குறிப்பு எழுதி கையொப்பமிட்டார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி, புதுடில்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ஜெ. முகமது ஷாநவாஸ், திரு. நாகை மாலி, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9